**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 128/2023**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW- 4/Lw-6 |
| Name | : | Mr. Senthilkumar |
| Father Name | : | M. Shanmugam |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.7.2025.

எதிரிகள் ஆஜர் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

**1.** நான் தற்சமயம் பத்மாவதிபுரம் மாரியம்மன் கோயில் வீதியில் வசித்து வந்து தனியார் கடை நடத்தி வருகிறேன். 01.08.2022 ம் தேதி என்னுடைய வேலை விஷயமாக கோயம்புத்தூர் சென்றிருந்தேன். திரும்பி வருவதற்கு இரவு 10 மணி ஆகிவிட்டது. என்னிடம் வேலை பார்க்கும் ஜெகநாதன் என்பவர் இரவு 10 மணிக்கு அலுவலகத்தில் பிரச்சனை என்று போன் மூலம் என்னை அழைத்தார். எங்களுடைய அலுவலகத்தில் ஆனந்த் என்பவர்

டிரைவராக பணிபுரிந்தார். அவருக்கும் வேறு நபர்களுக்கும் வண்டி நிறுத்துவதை பொறுத்து தகராறு என்று சொன்னார்கள். அடிதடி ஏற்பட்டு காயம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். அதன் பிறகு மறுநாள் கோவை அரசு மருத்துவமனைக்குச் சென்று ஆனந்தை பார்த்தேன். அவருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்பதை தெரிந்து கொள்ளவில்லை. போலீசார் விசாரித்தார்கள். சம்பவம் நடந்தது எங்கள் அலுவலகத்தில் என்று தெரிந்துகொண்டேன்.

__எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை__

1. என்னுடைய அலுவலகத்தில் சம்பவம் நடந்ததை பொறுத்து நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் என்னுடைய அலுவலகம் என்பதற்கு ஆவணங்கள் கொடுக்கவில்லை என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.10 18:43:24 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.